**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 455** **நாள்: 22.12.2025**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், குருநானக் கல்லூரி அருகில் உள்ள வேளச்சேரி மயானபூமியில் ரூபாய் 6.85 கோடி மதிப்பீட்டில் நவீன மயானபூமி கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், இன்று (22.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-172, குருநானக் கல்லூரி அருகில் உள்ள வேளச்சேரி மயானபூமியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 6.85 கோடி மதிப்பீட்டில் நவீன மயானபூமி கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இந்த மயான பூமியானது 10,000 சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். இம்மயான பூமியில் இரண்டு தனித்தனி தகன மேடை அறைகள், முழுமையான தானியங்கி எல்.பி.ஜி. அடிப்படையிலான தகன அமைப்புகள், துக்கம் அனுசரிப்பவர்களுக்கான விசாலமான ஒன்றுக்கூடும் பகுதிகள், அர்ப்பணிக்கப்பட்ட சடங்கு அறை, திறந்தவெளி பகுதி, கோயில் வளாகம், ஈரமான ஸ்க்ரப்பர் அமைப்புடன் கூடிய புகைப்போக்கி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், சுற்றுப்புற நிலப்பரப்பு, வாகனம் நிறுத்த வசதி, தீயணைப்பு அமைப்புகள் மற்றும் தீயணைப்பான்கள், தடையில்லா மின்சாரம், மழைநீர் வடிகால் அமைப்பு வசதி, அலுவலக அறைகள் மற்றும் கழிப்பறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மண்டலக்குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**